**<u>சுருக்கம்</u>**

பணியமைப்பு – தமிழ்நாடு பொறியியல் பணி – உதவி செயற்பொறியாளர்களை பதவி உயர்வு வாயிலாக செயற்பொறியாளர்களாக நியமனம் செய்வதற்கான 2008–09 ஆண்டிற்கான தேர்ந்தோர் பட்டியல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை

**அரசாணை (பத்தாண்டு) எண்.193** **நாள்:20.05.2009.**

**படிக்கப்பட்டது:**

நகராட்சி நிர்வாக ஆணையரின் நேர்முகக் கடிதம் ந.க.எண்.26640/08/எப்1, நாள் 28.07.08, 03.11.08, 18.12.08, 05.02.09 மற்றும் 27.02.2009.

---

**<u>ஆணை:-</u>**

மேலே படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதங்களில், தமிழ்நாடு நகராட்சிப் பணியில், பொறியியல் பிரிவில், 2008–09 ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பணியிடங்களை பதவி உயர்வின் வாயிலாக நியமனம் செய்வதற்கு தகுதியுடைய உதவி செயற்பொறியாளர்களின் தேர்ந்த பட்டியலுக்கு (Panel) அரசின் ஒப்புதல் வேண்டி செயற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

2) தமிழ்நாடு நகராட்சிப் பொறியியல் பணியில், 2008 – 09 ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர்களின் பணியிடத்திற்கான காலியிட மதிப்பீட்டின் எண்ணிக்கை 5 (ஐந்து) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

3) மேலே படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தபின், நகராட்சி நிர்வாகத் துறையில், தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணியில், செயற்பொறியாளராக பதவி உயர்வு பெறுவதற்கு கீழ்க்காணும் 5 பேர் (ஐந்து) அடங்கிய உதவி செயற்பொறியாளர்களைக் கொண்ட 2008–09 ஆம் ஆண்டிற்கான தேர்ந்தோர் பட்டியலுக்கு ஒப்புதல் அளித்து அரசு இதன் மூலம் ஆணையிடுகிறது:–

| வ. எண் | உதவி செயற் பொறியாளர்களின் பெயர் | தற்போது பணியாற்றும் நகராட்சி |
|---|---|---|
| | திருவாளர்கள் | |
| 1. | என். நடராஜன் | மேட்டூர் |
| 2. | எஸ். கனகசுப்புரத்தினம் | மயிலாடுதுறை |
| 3. | ஆர். மணி | மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், தஞ்சாவூர் |
| 4. | எம். இராமசாமி | ஆத்தூர் |
| 5. | பி. இராமமூர்த்தி | குன்னூர் |

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ஐந்து உதவி செயற்பொறியாளர்கள் அடங்கிய பட்டியலை சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தெரிவிப்பதுடன், பட்டியலில் சேர்க்கப்படாத ஏனைய நபர்களுக்கும் தெரிவித்து அவர்கள் அதனை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை சம்பந்தப்பட்ட கோப்பில் பதிவு செய்யுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நிரஞ்சன் மார்டி**
**அரசுச் செயலாளர்**

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர்கள்.
(நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5 வழியாக)
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை – 600 108.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.

நகல்:–
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.2)துறை, சென்னை – 9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்